History Model Test Questions 18 in Tamil With Answers

1. 1924 ல் வைக்கம் சத்தியாகிரகம் எதற்காக நடைபெற்றது?

   அ. தாழ்த்தப்பட்ட இந்துக்களுக்கு ஆலயங்களை திறந்துவிடுவதற்கு

   ஆ. பிரபுக்களின் சுரண்டலுக்கு எதிரான போர்

   இ. பத்திரிக்கை கட்டுப்பாட்டை நீக்க

   ஈ. திருவிதாங்கூர் மாநிலத்தில் நிர்வாகத்தை ஜனநாயகப்படுத்த

2. சமுத்திரகுப்தர், மேகவர்மன் என்ற ஓர் அயல்நாட்டு அரசரை கயாவில் ஒரு துறவி மடம் கட்ட அனுமதித்தார். மேகவர்மன் எந்நாட்டு அரசன்?

   அ. நேபாளம் **ஆ. இலங்கை**

   இ. பூடான் ஈ. பாகிஸ்தான்

3. கீழ்க்கண்ட கூற்றுகளை ஆய்க.

   1. பல்லவர்களின் கல்வெட்டுகளில் மிகுதியானவை சமஸ்கிருத்தில் உள்ளன.

   2. முதலாம் மகேந்திரவர்மன் மத்தவிலாச பிரகசனம் என்ற நகைச்சுவை செய்யுளை தொகுத்தார்.

   3. பல்லவர்கள் காலத்தில் யுவான்சுவாங் என்ற சீனப்பயணி காஞ்சிக்கு வருகை புரிந்தார்.

   4. திங்நாக என்பவர் அளவையில் நிபுணர் மற்றும் நியாய பாஷியத்தின் ஆசிரியர் ஆவார்.

   இவற்றில்

   அ. 1 மட்டும் சரியானது ஆ. 1 மற்றும் 2 சரியானவை

   இ. 1, 2 மற்றும் 3 சரியானவை **ஈ. அனைத்தும் சரியானவை**

4. கீழ்க்காணும் ஆட்சியாளர்களில் எந்த ஒரு ஆட்சியாளர்கள் நாடு முழுவதற்கும் ஒரே மாதிரியான நிர்வாகத்தை பெற்றிருந்தனர்?

   அ. குப்த ஆட்சியாளர்கள் ஆ. முகலாய ஆட்சியாளர்கள்

   இ. ஆங்கிலேய ஆட்சியாளர்கள் ஈ. மேற்குறிப்பிட்ட அனைத்து ஆட்சியாளர்களும்

5. சோழர்களால் கட்டப்பட்ட கோயில்களின் சிறப்பான அம்சம்

   அ. விமானங்கள் ஆ. பக்தர்களுக்கான மண்டபங்கள்

   இ. பெரியளவிலான தூண்கள் ஈ. கோபுரங்கள்

6. தமிழில் அமைந்த முதல் இசை நாடகம்

   அ. அரிச்சந்திரா நாடகம் ஆ. நந்தன் சரித்திரம்

   இ. சகுந்தலா நாடகம் ஈ. சாவித்திரி நாடகம்

7. காஞ்சிபுரத்தில் உள்ள கைலாசநாதர் ஆலயத்தை கட்டியவர்

   அ. இரண்டாம் நந்திவர்மன் ஆ. முதலாம் மகேந்திரவர்மன்

   இ. இரண்டாம் நரசிம்மவர்மன் ஈ. தண்டிவர்மன்

8. சிந்து சமவெளி மக்கள் வீடுகள் கட்ட எதை உபயோகப்படுத்தினார்கள்?

அ. கல் ஆ. மரம்

இ. செங்கல் ஈ. இவை அனைத்தும்

9. பழைய கற்கால மக்களின் முக்கியத் தொழில்

அ. வேளாண்மை ஆ. கால்நடை வளர்ப்பு

இ. மீன் பிடித்தல் **ஈ. வேட்டையாடுதல் மற்றும் உணவு தேடுதல்**

10. விதவை கல்விக்கு காரணமான பெரியவர்கள்

அ. டி.கே. கார்வி மற்றும் பண்டித ரமாபாய்

ஆ. எம்.ஜி. ரானடே மற்றும் ஆர்.ஜி. பந்தார்கர்

இ. ஈஸ்வர் சந்திர வித்யாசாகர் மற்றும் கேசவ சந்திரசென்

ஈ. பி.எம்.மலபாரி மற்றும் கே.ஸ்ரீதரலு நாயுடு

11. சாதி அமைப்பில் காணப்படும் _____ை அனைத்து சமூக சீர்திருத்தவாதிகள் முக்கியமாக எதிர்த்தார்கள்

அ. வர்ணாமுறை ஆ. சாதிமுறை

இ. ஆசிரமங்கள் முறை **ஈ. தீண்டாமை**

12. இந்திய மற்றும் ரோமர்களின் முக்கிய வணிகத் தலமாக விளங்கியது

அ. அரிக்கமேடு **ஆ. அலெக்சாண்டிரியா**

இ. மதுரை ஈ. முசிறி

13. சிந்து சமவெளி நாகரிகம்

அ. பத்தாயிரம் ஆண்டுகள் பழமையானது ஆ. ஏழாயிரம் ஆண்டுகள் பழமையானது

இ. ஐந்தாயிரம் ஆண்டுகள் பழமையானது ஈ. மூன்றாயிரம் ஆண்டுகள் பழமையானது

14. சரியான ஜோடியை தேர்ந்தெடுக்கவும்?

அ. எல்லோரா குகை - சாகர்

ஆ. மகாபலிபுரம் - இராட்டிரகூடர்கள்

இ. மீனாட்சி ஆலயம் - பல்லவர்கள்

ஈ. கஜுராஹோ - சந்தேலர்கள்

15. கீழ்க்கண்ட கூற்றுகளை ஆய்க. இவற்றில் கிரிப்ஸ் அறிக்கையில் அடங்கியவை:

1. இந்தியாவிற்கு டொமினியன் அந்தஸ்து உறுதிபடுத்தியது.

2. பிரிட்டிஷ் இந்தியா மற்றும் மன்னர் மாகாணங்களில் பிரதிநிதிகளைக் கொண்டு அரசியல் சாசன அமைப்பு உருவாக்கப்படும்.

3. இந்தியர்களை மட்டும் கொண்டு நிர்வாகக்குழு அமைக்கப்படும்.

4. இந்தியப் பிரிவினையை பரிந்துரைத்தது.

இவற்றில்

அ. 1, 2 மற்றும் 3 சரியானவை ஆ. 1, 3 மற்றும் 4 சரியானவை

இ. 2, 3 மற்றும் 4 சரியானவை ஈ. 1, 2 மற்றும் 4 சரியானவை

16. 'வெள்ளையனே வெளியேறு' தீர்மானம் யாரால் வடிவமைத்து தயாரிக்கப்பட்டது?

அ. ஆச்சார்ய கிருபாளனி **ஆ. ஜவஹர்லால் நேரு**

இ. சர்தார் வல்லபாய் பட்டேல் ஈ. பட்டாபி சீத்தாராமையா

17. கீழே கொடுக்கப்பட்டுள்ள நிகழ்வுகளை கால வரிசைப்படி சரியானவை தேர்ந்தெடு:

1. பாலகங்காதர திலகரின் இறப்பு

2. காங்கிரஸின் நாக்பூர் மாநாடு

3. மாப்பிளா புரட்சி

4. சாந்தி நிகேதனில் விஸ்வபாரதியின் தொடக்கம்

இவற்றில்,

அ. 4, 3, 2 மற்றும் 1 ஆ. 3, 4, 2 மற்றும் 1

இ. 2, 1, 3 மற்றும் 4 ஈ. 3, 2, 4 மற்றும் 1

18. பத்தினி வழிபாடு யாரால் ஏற்படுத்தப்பட்டது?

அ. நெடுஞ்சேரலாதன் ஆ. கரிகாலன்

இ. இளங்கோ அடிகள் **ஈ. செங்குட்டுவன்**

19. கர்நாடகப் போர்கள் இவர்களுக்கிடையே நடந்தது.

அ. கர்நாடக நவாபு மற்றும் ஆங்கிலேயர்

ஆ. கர்நாடக நபாபு மற்றும் பிரெஞ்சுக்காரர்கள்

இ. ஆங்கிலேயர் மற்றும் பிரெஞ்சுக்காரர்கள்

ஈ. இவற்றுள் எதுவுமில்லை

20. கீழ்க்கண்ட வாக்கியங்களை கவனி:

உறுதி (A): குஷாணர்கள் மத்திய ஆசியாவை பூர்வீகமாகக் கொண்டவர்கள்.

காரணம்(R): இவர்கள் யூச்சி இனத்தில் தோன்றியவர்கள்

கீழே குறிப்பிட்டுள்ள குறியீட்டில் சரியான விசையைத் தேர்ந்தெடு.

அ. (A) மற்றும் (R) இரண்டும் சரி, மேலும் (R) என்பது (A) விற்கு சரியான விளக்கம்

ஆ. (A) மற்றும் (R) இரண்டும் சரி, மேலும் (R) என்பது (A) விற்கு சரியான விளக்கமல்ல

இ. (A) சரி ஆனால் (R) தவறு

ஈ. (A) தவறு, ஆனால் (R) சரி

21. கீழ்க்கண்ட வாக்கியங்களை கவனி:

உறுதி(A): டாக்டர் அன்னிபெசண்ட் தன்னாட்சி இயக்கத்தை ஆங்கிலேய ஆட்சிக்கு எதிராக ஏற்படுத்தினார்.

காரணம்(R): அவர், அனைத்து தரப்பு இந்திய மக்களையும் மதத்திற்கு அப்பாற்பட்டு ஒரே அரசியல் முழக்கத்தின் கீழ் ஒன்று திரட்ட விரும்பினார்.

கீழே குறிப்பிட்டுள்ள குறியீட்டில் சரியான விடையைத் தேர்ந்தெடு.

அ. (A) மற்றும் (R) இரண்டும் சரி, மேலும் (R) என்பது (A) விற்கு சரியான விளக்கம்

ஆ. (A) மற்றும் (R) இரண்டும் சரி, மேலும் (R) என்பது (A) விற்கு சரியான விளக்கமல்ல

இ. (A) சரி ஆனால் (R) தவறு

ஈ. (A) தவறு, ஆனால் (R) சரி

22. ஆரியர்களின் கருத்துப்படி பின்வருவனவற்றுள் சிறு தெய்வம் அல்லாத ஒன்று எது?

அ. மித்ரா ஆ. அதித்யாஸ்

இ. அஸ்வின்ஸ் **ஈ. வாசுஸ்**

23. மஹாயானிசத்தின் மிகப்பெரிய விளக்கவுரையாளர்

அ. திங்நாகா ஆ. தர்மகீர்த்தி

இ. நாகர்ஜுனா ஈ. வாசுபந்து அஸாங்கா

24. பின்வருவனவற்றுள், முதல் உலகப்போரில் இறந்த வீரர்களுக்காக கட்டப்பட்ட நினைவுச் சின்னம் எது?

அ. இந்தியாவின் நுழைவு வாயில் **ஆ. இந்தியா கேட்**

இ. விஜய் பாத் ஈ. விக்டோரியா நினைவுக்கூடம்

25. அஜந்தா ஓவியங்கள் எதைப் பற்றி குறிப்பிடுகிறது?

அ. ஜைன மதம் **ஆ. புத்த மதம்**

இ. சைவம் ஈ. வைணவம்

26. பஞ்சசீல கொள்கை எங்கு முறைப்படுத்தப்பட்டது?

அ. பாரீஸ் **ஆ. புதுடெல்லி**

இ. பாண்டுங் ஈ. கெய்ரோ

27. "தேசப்பற்றே சமயம், சமயம் என்பது இந்தியாவை நேசிப்பது" சொன்னவர் யார்?

அ. சுவாமி விவேகானந்தர் ஆ. ராஜ் நாராயணன் போஸ்

இ. பக்கிம் சந்திர சட்டர்ஜி ஈ. பால கங்காதர திலகர்

28. புத்தக்கலையில் பிரதிபலிக்காத ஒன்று

அ. ஸ்தூபி ஆ. விகாரம்

இ. சைத்யா **ஈ. ரெலிக் டவர்**

29. மௌரிய கலைக்கு சிறந்த சான்றாக விளக்குவது

அ. ஸ்தூபி ஆ. சிற்பங்கள்

இ. அசோகரது தூண்கள் **ஈ. (ஆ) மற்றும் (இ) இரண்டும்**

30. சிந்து சமவெளி மக்கள் வணங்கிய தெய்வம்

அ. பசுபதி ஆ. இந்திரன் மற்றும் வருணன்

இ. பிரம்மன் ஈ.விஷ்ணு

31. அடிப்படைக் கல்வியின் "வார்தா திட்டம்" யாரால் தொடங்கப்பட்டது?

அ. ஜவஹர்லால் நேரு ஆ. லியாகத் அலி கான்

இ. மகாத்மா காந்தி ஈ. எம்.ஏ.ஜின்னா

32. குப்தர்கள் ஆட்சிக் காலத்தைக் காட்டிலும் சாதி அமைப்பு கடினமாக இருந்த காலம்

அ. மௌரிய காலம் ஆ. ஹர்ஷ வர்த்தனர் காலம்

இ. சாகாஸ் **ஈ. சோழர்கள்**

33. இவற்றுள் எவர் சோழ மன்னர்?

அ. நெடுஞ்செழியன் **ஆ. கரிகாலன்**

இ. நெடுஞ்சேரலாதன் ஈ. ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன்

34. தஞ்சை சிவன் கோயிலைக் கட்டிய இராசராசர் ஒரு

அ. சோழ மன்னர் ஆ. பல்லவ மன்னர்

இ. பாண்டிய மன்னர் ஈ. இவற்றுள் எதுவுமில்லை

35. சிந்து சமவெளி நாகரிகம் கண்டுபிடிக்கப்பட்ட ஆண்டு

அ. 1922 ஆ. 1910 இ. 1822 ஈ. 1824

36. கங்கை கொண்ட சோழபுரம் கோயிலைக் கட்டியவர்

அ. முதலா இராஜராஜன் ஆ. விக்கிரம சோழன்

இ. ராஜாதி ராஜா **ஈ. முதலாம் ராஜேந்திரன்**

37. யாருடைய கருத்தின்படி 'ஜனநாயக சமத்துவ சமுதாயம்' என்ற சொல் விவரிக்கப்படுகிறது?

அ. மகாத்மா காந்தி ஆ. திருமதி. இந்திரா காந்தி

இ. ஜவஹர்லால் நேரு ஈ. சர்தார் வல்லபாய் படேல்

38. கான் அப்துல் காபர்கான் எவ்வாறு அழைக்கப்படுகிறார்?

அ. காந்திஜி ஆ. நேதாஜி

இ. ராஜாஜி **ஈ. எல்லை காந்தி**

39. முதல் உலகப் போர் தொடங்கிய ஆண்டு

அ. 1914 ஆ. 1918 இ. 1939 ஈ. 1944

40. ஹர்சர் அரியணையேறிய ஆண்டு

அ. கி.பி. 605 **ஆ. கி.பி. 606** இ. கி.பி. 643 ஈ. கி.பி. 647

41. கடைசி மௌரிய அரசன்

அ. சந்திரகுப்த மௌரியர் ஆ. பிந்துசாரன்

இ. மகேந்திரன் **ஈ. பிருகத்ரன்**

42. முகமது-பின் – துகள் தன் தலைநகரை மாற்றியது

அ. பம்பாயிலிருந்து டெல்லிக்கு ஆ. டெல்லியிலிருந்து பம்பாய்க்கு

இ. டெல்லியிலிருந்து உஜ்ஜயினிக்கு **ஈ. டெல்லியிலிருந்து தேவகிரிக்கு**

43. சிம்லா உடன்படிக்கை கீழ்க்கண்ட நாடுகளுக்கிடையில் ஏற்பட்டது

அ. இந்தியா மற்றும் சீனா **ஆ. இந்தியா மற்றும் பாகிஸ்தான்**

இ. இந்தியா மற்றும் இலங்கை ஈ. இந்தியா மற்றும் வங்காளதேசம்

44. தமிழ்நாட்டில் சுப்பிரமணிய பாரதியார், சுப்ரமணிய சிவா மற்றும் வ.உ. சிதம்பரனார் யாருடைய நெருங்கிய நண்பர்களாக செயல்பட்டனர்?

அ. திலக் ஆ. எம்.ஜி.ரானடே

இ. மோதிலால் நேரு ஈ. சி.ஆர். தாஸ்

45. 'வெள்ளையனே வெளியேறு' இயக்கம் அறிவிக்கப்பட்டது

அ. 1923 ஆ. 1932 **இ. 1942** ஈ. 1945

46. முதலாம் மகேந்திர வர்மனைத் தோற்கடித்தவர்

அ. முதலாம் புலிகேசி **ஆ. இரண்டாம் புலிகேசி**

இ. ஹர்சர் ஈ. குமாரகுப்தர்

47. எந்த காங்கிரஸ் கூட்டத்தில் 'பூரண சுயராஜ்யம்' வேண்டி தீர்மானம் நிறைவேற்றப்பட்டது?

அ. லாகூர் காங்கிரஸ் மாநாடு ஆ. மும்பை காங்கிரஸ் மாநாடு

இ. கல்கத்தா காங்கிரஸ் மாநாடு ஈ. சூரத் காங்கிரஸ் மாநாடு

48. வாதாபியை அழித்த போது பல்லவ படைத்தளபதி

அ. பரஞ்சோதி ஆ. பரமன்

இ. மாறவர்மன் ஈ. விஷ்ணுவர்மன்

49. முதல் பானிபட் போர் நடைபெற்ற ஆண்டு

அ. கி.பி. 1556 **ஆ. கி.பி. 1526** இ. கி.பி. 1562 ஈ. கி.பி. 1652

50. இரண்டாம் சந்திரகுப்தரின் மற்றொரு தலைநகரம்

அ. பாடலிபுத்திரம் **ஆ. உஜ்ஜயினி**

இ. டெல்லி ஈ. காசி

51. குப்த மரபை தோற்றுவித்தவர்

அ. ஸ்ரீ குப்தர் ஆ. சமுத்திர குப்தர்

இ. முதலாம் சந்திர குப்தர் ஈ. இவற்றுள் எவருமில்லை

52. எது பின் தேதியிட்ட காசோலை என காந்திஜியால் வர்ணிக்கப்பட்டது?

அ. ஆகஸ்ட் சலுகை ஆ. காபினேட் தூதுக்குழு

இ. சைமன் குழு **ஈ. கிரிப்ஸ் தூதுக்குழு**

53. "இன்குலாப் ஜிந்தாபாத்" என்ற கோஷத்தை எழுப்பியவர் _____ ஆவார்.

அ. முகமது அலி ஜின்னா **ஆ. முகமது இக்பால்**

இ. சுபாஷ் சந்திரபோஸ் ஈ. பகத்சிங்

54. கீழ்க்கண்டவருள் எவரைக் குறித்த குறிப்பு சங்க இலக்கியத்தில் காணப்படுகிறது?

அ. கன்னடர் **ஆ. வடுகர்**

இ. துலுக்கர் ஈ. இவர்களுள் எவருமில்லை

55. மார்லி பிரபு யார்?

அ. கவர்னர் ஜெனரல் **ஆ. இந்தியாவிற்கான அரசுச் செயலர்**

இ. பிரதம அமைச்சர் ஈ. இவற்றுள் எதுவுமில்லை

56. 'சமாதானத் தந்தை' என்று போற்றப்படும் பிரதமர் யார்?

அ. ஜவஹர்லால் நேரு **ஆ. லால் பகதூர் சாஸ்திரி**

இ. இந்திரா காந்தி ஈ. இராஜீவ் காந்தி

57. "வேதத்திற்கு திரும்புக" என்பது _____ உடைய நீதி வாக்கியமாகும்.

அ. இராஜாராம் மோகன்ராய் **ஆ. சுவாமி தயானந்த சரஸ்வதி**

இ. கேசப் சந்திரசென் ஈ. சுவாமி விவேகானந்தர்

58. _____என்பவர் வைசிராயாக இருந்தபோது வங்கப் பிரிவினை நிகழ்ந்தது.

அ. ஹார்டிங் பிரபு ஆ. மாண்டேகு பிரபு

இ. கர்சன் பிரபு ஈ. மிண்டோ பிரபு

59. "சுயராஜ்ய கட்சியை" நிறுவியது யார்?

அ. சி.ஆர்.தாஸ் ஆ. சி. இராஜகோபாலச்சாரியார்

இ. காமராஜ் ஈ. திலகர்

60. மொகஞ்சதரோ-ஹரப்பா அகழ்வாராய்ச்சி கூறு நாகரிகம்

அ. சுமேரியர் **ஆ. சிந்து**

இ. ரோமானியர் ஈ. திராவிடர்

61. சுதேசி இயக்கம் என்பது _____ என்று பொருள்படும்.

அ. பிரிட்டிஷாருக்கு எதிராக கோஷங்கள் எழுப்புதல்

ஆ. கதர் துணிகளையும், தொப்பியையும் அணிந்து கொள்ளுதல்

இ. அன்னிய பொருள் புறக்கணிப்பு மற்றும் இந்தியப் பொருள் ஆதரவு

ஈ. மொழி பரிமாற்றத்தில் இந்தி மொழியை பயன்படுத்துதல்

62. சாகாரி மற்றும் விக்கிரமாதித்யன் என்ற பட்டங்களை பெற்றவர்

அ. சமுத்திர குப்தர் ஆ. முதலாம் சந்திர குப்தர்

இ. இரண்டாம் சந்திரகுப்தர் ஈ. குமார குப்தர்

63. சித்தார்த்தா ஞானோதயம் அடைந்த இடம்

அ. கயா ஆ. சார்நாத்

இ. குசிநகர் ஈ. பாடலிபுத்திரம்

64. சங்கங்கள் _____ ஆட்சிக் காலத்தில் செழித்தோங்கியிருந்தது.

அ. சோழர்கள் ஆ. பல்லவர்கள்

இ. பாண்டியர்கள் ஈ. ராஷ்டிர கூடர்கள்

65. இந்திய சுதந்திரப் போராட்ட வரலாற்றில் 1930ம் ஆண்டுடன் தொடர்புடையது

அ. ஒத்துழையாமை இயக்கம் **ஆ. சட்டமறுப்பு இயக்கம்**

இ. வெள்ளையனே வெளியேறு இயக்கம் ஈ. சுதேசி இயக்கம்

66. தமிழ்நாட்டில் உப்பு சத்யாகிரக இயக்கத்தை தலைமையேற்று நடத்தியவர்

அ. காமராஜ் ஆ. சத்யமூர்த்தி

இ. சி.இராஜகோபாலாச்சாரி ஈ. பிரகாசம்

67. யாருடைய ஆட்சிக் காலத்தில் உடன்கட்டை ஏறுதல் பழக்கத்தில் இல்லை?

அ. சேரர் ஆ. பாண்டியர்

இ. பல்லவர் ஈ. சோழர்

68. ஆரியர்கள் இந்தியாவில் நுழைந்தது மட்டுமல்லாது தங்களுடைய கலாச்சாரத்தை தமிழ் கலாச்சாரத்துடன் எதன் மூலம் புகுத்தினார்?

அ. இசை மற்றும் நாட்டியம் ஆ. விவசாயம்

இ. குடும்ப அமைப்பு ஈ. சிற்பக்கலை

69. கீழ்க்கண்ட அரசர்களுள் யார் 'கவிராஜா' என்ற பட்டத்தைப் பெற்றிருந்தார்?

அ. முதலாம் குமார குப்தர் ஆ. முதலாம் சந்திர குப்தர்

இ. சந்திர குப்த விக்ரமாதித்தன் **ஈ. சமுத்திர குப்தர்**

70. 'இந்தியாவில் சமய அமைதியின்மை' என்று கூறப்படும் காலம்

அ. கி.மு. ஆறாம் நூற்றாண்டு ஆ. கி.மு. ஐந்தாம் நூற்றாண்டு

இ. கி.மு. நான்காம் நூற்றாண்டு ஈ. கி.மு.மூன்றாம் நூற்றாண்டு

71. மகாவீரரின் மறுபெயர்

அ. சித்தார்த்தர் ஆ. கௌதமர்

இ. வர்த்தமானர் ஈ. ரிஷபதேவர்

72. ஆரிய சமாஜத்தை தோற்றுவித்தவர்

அ. இராஜாராம் மோகன் ராய் **ஆ. தயானந்த சரஸ்வதி**

இ. பிலவட்ஸ்கி ஈ. ஏ.எஸ். ஆல்காட்

73. கீழ்க்குறிப்பிட்டுள்ள தமிழ் இதழ்களுள் எந்த இதழ் ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் தமிழகத்தில் அரசியல் விழிப்புணர்ச்சி ஏற்பட முக்கிய பங்காற்றியது?

அ. வானம்பாடி **ஆ. சுதேசமித்ரன்**

இ. விடுதலை ஈ. தினமலர்

74. தூத்துக்குடியில் சுதேசி ஸ்டீம் நேவிகேஷன் கம்பெனியைத் தோற்றுவித்தவர் பெயரைக் குறிப்பிடுக.

அ. பாரதியார் ஆ. சுப்பிரமணிய சிவா

இ. வ.உ.சிதம்பரனார் ஈ. தில்லையாடி வள்ளியம்மை

75. சங்க காலத்தில் மதுரையின் மற்றொரு பெயர்

அ. கூடல் ஆ. அழகர்

இ. தேனி ஈ. பாண்டியநாடு

76. இந்தியாவின் முதல் துணை ஜனாதிபதி யார்?

அ. வி.வி. கிரி **ஆ. சர்வப்பள்ளி இராதாகிருஷ்ணன்**

இ. ஜெயில் சிங் ஈ. சர்தார் பட்டேல்

77. பாரத சக்தி மகாகாவியம் பாடியவர்

அ. பாரதியார் ஆ. ச.து.சு. யோகியார்

இ. சுத்தானந்த பாரதியார் ஈ. கவிமணி

78. காந்திஜி பிறந்த ஆண்டு

அ. அக்டோபர் 2, 1859 **ஆ. அக்டோபர் 2, 1869**

இ. அக்டோபர் 2, 1879 ஈ. அக்டோபர் 2, 1889

79. தண்டி யாத்திரை _____ உடன் தொடர்புடையது.

அ. கிலாபத் இயக்கம் ஆ. சுதேசி இயக்கம்

இ. ஒத்துழையாமை இயக்கம் **ஈ. சட்டமறுப்பு இயக்கம்**

80. லாகூர் தடியடியில் அடிப்பட்டதால் இறந்து போன சுதந்திர போராட்ட வீரர்

அ. கோபால கிருஷ்ண கோகலே ஆ. திலகர்

இ. பாரதியார் **ஈ. லாலா லஜபதிராய்**

81. கீழ்க்காண்பவற்றுள் எந்த இணை சரியாகப் பொருத்தப்பட்டுள்ளது?

அ. எம்.கே. காந்தி - டிஸ்கவரி ஆப் இந்தியா

ஆ. ஜவஹர்லால் நேரு - கேசரி

இ. ரவீந்திரநாத் தாகூர் - கீதாஞ்சலி

ஈ. பாலகங்காதர திலகர் - வந்தே மாதரம்

82. தமிழ் பகத்சிங் என கருதப்படுபவர் யார்?

அ. வாஞ்சிநாதன் ஆ. வி.வி. எஸ். ஐயர்

இ. அரபிந்தகோஷ் ஈ. இவற்றுள் எதுவுமில்லை

83. ஆரியர்களின் பூர்வீகம் ஆர்க்டிக் பகுதி கூறியவர்

அ**. பாலகங்காதர திலகர்** ஆ. நீலகண்ட சாஸ்திரி கே.ஏ

இ. எஸ்.என். சென் ஈ. மார்க்ஸ் முல்லர்

84. மகாவீரர் பிறந்த இடம்

அ. வைசாலி **ஆ. குண்டக்கிராமம்**

இ. கபிலவஸ்து ஈ. நேபாளம்

85. கிலாபத் இயக்கத்தை இந்தியாவில் தொடங்கியவர்(கள்)

அ. காந்திஜி ஆ. நவாப் சலிமுல்லா

இ. அலி சகோதரர்கள் ஈ. ஜின்னா

86. தக்கோலப் போரில் தோல்வியடைந்த சோழ அரசர்

அ. முதலாம் ஆதித்தன் ஆ. இரண்டாம் ராஜராஜன்

இ. விஜயாலயன் **ஈ. முதலாம் பராந்தகன்**

87. இரண்டாம் புலிகேசியை தோற்கடித்த பல்லவ மன்னர்

அ. முதலாம் மகேந்திரவர்மன் ஆ. சிம்ம விஷ்ணு

இ. முதலாம் நரசிம்மவர்மன் ஈ. இரண்டாம் நந்திவர்மன்

88. வேதாரண்யம் உப்பு சத்தியாகிரகத்திற்கு தலைமையேற்றவர்

அ. காந்திஜி **ஆ. ராஜாஜி**

இ. வ.உ.சி ஈ. காமராஜர்

89. கூட்டுறவு கடன் சங்கங்களை அறிமுகப்படுத்தியவர்

அ. ரிப்பன் பிரபு **ஆ. கர்சன் பிரபு**

இ. லிட்டன் பிரபு ஈ. டல்ஹௌசி பிரபு

90. கி.மு. 483ல் கௌதம புத்தர் மறைந்த இடம்

அ. காசி **ஆ. குசிநகரம்**

இ. சாரநாத் ஈ. சாஞ்சி

91. சங்ககாலத்தில் இவர்களுடைய படையெடுப்பால் பாண்டிய ஆட்சி முடிவுக்கு வந்தது?

அ. சாதவாகனர்கள் ஆ. சோழர்கள்

இ. களப்பிரர்கள் ஈ. பல்லவர்கள்

92. லாலா லஜபதிராயின் இறப்புக்குக் காரணமான காவல் அதிகாரியை சுட்டுக் கொன்றவர்

அ. பகத்சிங் ஆ. பல்பீர் சிங்

இ. சுகதேவ் ஈ. சி.ஆர். தாஸ்

93. 'ஆசியாவின் ஒளி' என்று அழைக்கப்பட்டவர்

அ. அசோகர் ஆ. மகாவீரர்

இ. புத்தர் ஈ. காந்திஜி

94. காந்தியின் காலம் என இக்கால கட்டம் அழைக்கப்படுகிறது?

அ. 1909-1927 **ஆ. 1919 – 1947** இ. 1919 – 1937 ஈ. 1885- 1915

95. 'கடாரம் வென்றான்' – என அழைக்கப்படுபவன்

அ**. முதலாம் இராசேந்திரன்** ஆ. குலோத்துங்கச் சோழன்

இ. அநபாயன் ஈ. விசயாலயன்

96. நமது நாட்டிற்கு 'ஜெய்ஹிந்த்' என்ற முழக்கத்தை வழங்கியவர் யார்?

அ. லாலா லஜபதி ராய் ஆ. அரவிந்த் கோஸ்

இ. சுபாஷ் சந்திர போஸ் ஈ. மகாத்மா காந்தி

97. முதல் புத்த சமய மாநாட்டினைக் கூட்டியவர்

அ. அஜாத்சத்ரு ஆ. பிம்பிசாரர்

இ. அசோகர் ஈ. தனநந்தர்

98. மக்கள் தொகை கணக்கெடுப்பு முறையை இந்தியாவில் ரிப்பன் பிரபு அறிமுகப்படுத்திய ஆண்டு

அ. 1882 ஆ. 1883 **இ. 1881** ஈ. 1880

99. பாளையப்பட்டு ஆட்சி முறையை உருவாக்கியவர்

அ. கிருஷ்ண தேவராயர் ஆ. அரியநாதன்

இ. பிரதாப ருத்ரன் **ஈ. விஸ்வநாத நாயக்கர்**

100. புகழூர் கல்வெட்டு

அ. சேரர்களைப் பற்றியது ஆ. சோழர்களைப் பற்றியது

இ. பாண்டியர்களைப் பற்றியது ஈ. பல்லவர்களைப் பற்றியது